## செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை திரு.ச.அருண்ராஜ் இ.ஆ.ப.,

ந.க.12874–2019–அ3 நாள்.31.05.2024

பொருள் பொதுப்பணி – கருணை அடிப்டையில் பணி நியமனம் – செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு – கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 02.10.2018 அன்று காலஞ்சென்ற திரு.க.மூர்த்தி என்பவரின் மகன் திரு.மூ.சாந்தகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது – இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

படிக்க 1.செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.12874–2019–அ4(அ3) நாள். 16.02.2021.

2. இவ்வலுவலக கடித ந.க.12874–2019–அ3–நாள். 03.08.2022

3.அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை நாள்.08.03.2023.

4.கூடுதல் தலைமைச் செயலர் – வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களின் கடித எண்.ஆ.கு.–3–4600–2024 – நாள்.20.02.2024.

5.கூடுதல் தலைமைச் செயலர் – வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை – 5 அவர்களின் கடித எண்.ஆ.கு.–3–4600–2024 – நாள்.28.02.2024.

.....

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு, அஞ்சூர் கிராம உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 02.10.2018 அன்று காலஞ்சென்ற திரு.க.மூர்த்தி என்பவரின் மகன் திரு.மூ.சாந்தகுமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி பணியிடம் வழங்கப்பட்டு தனியர் 17.02.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது அரசாணை(நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ–1) துறை நாள்.08.03.2023–ன்படி மாவட்ட நிர்வாகமே கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் நபர்களுக்கு பணிவரன்முறை செய்யலாம் என பார்வை –4 ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்பேரில்

கோப்பு பரிசீலினை செய்யப்பட்டதில் தனியரின் பணி தொடர்பாக கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகிறது.

| வ. எண் | பணிவரன்முறை செய்வதற்கான தேவையான விவரங்கள் | பணிவரன்முறை செய்வதற்கு தனியரால் பூர்த்தி செய்யப்பட்ட தகுதிகள் |
|---|---|---|
| 1. | வயது வரம்பு | தனியர் 18–40 வயதிற்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் |
| 2. | விண்ணப்பிப்பதற்காக கால அளவு | தனியர் அரசு அலுவலர் காலஞ்சென்ற 3 ஆண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் |
| 3. | விண்ணப்பித்த நாளில் பெற்ற கல்வித்தகுதி | தனியர் விண்ணப்பித்த நாளில் 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். |

எனவே, பார்வை 5–ல் காணும் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளபடி தனியர் திரு.மூ.சாந்தகுமார் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்ய விதித்தளர்வுகள் ஏதும் தேவைப்படாத நிலையிலும், தனியர் மீது எவ்வித குற்றக்குறிப்பாணைகளும் நிலுவையில் இல்லாத நிலையிலும், அரசாணை(நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ–1) துறை நாள்.08.03.2023–ன்படி செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலகு, செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.மூ.சாந்தகுமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த நாளான 17.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/–ச.அருண்ராஜ்**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**செங்கல்பட்டு.**

**––உத்தரவின்படி––**

Arunh 31/05/2024

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக**
**உதவியாளர்(பொது)**

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்
நகல்
1.கூடுதல் தலைமைச் செயலர்/
வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5 ...... அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2.சம்மந்தப்பட்ட அலுவலர்கள்...... தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும்.

31/5/24

3.மாவட்ட ஆட்சியரின் முகாம் எழுத்தர்
4.மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர்
5.அ3 இருக்கை